

# படிப்பினையைக்கொண்டே முடிவுஎடுக்கப்படும்

**- சந்திரசேகர்**

(டில்லி)

இந்தியா சர்வதேச விவகாரங்களில் மிகவும் கவனமாகவே நடந்து கொள்ளும் என்றும் அதிலும் குறிப்பாக இலங்கை விவகாரங்கள் போன்ற சிக்கலான விவகாரங்களில் சமரசம் காண முற்படும் போது மிகவும் அவதானமாகவே நடந்து கொள்ளும் எனவும் இந்திய பிரதம மந்திரி சந்திரசேகர் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையின் பிரச்சினையில் சமரசம் செய்ய தலையிட்ட சம்பவம் வருந்தத்தக்கதாக அமைந்து விட்டதெனவும் இனிமேல் இந்த அனுபவத்தைக் கொண்டே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமெனவும் சந்திரசேகர் மேலும் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் கேள்விநேரத்தில் பேசும்போதே சந்திரசேகர் இவ்வாறு தெரிவித்தார்.

Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (09 - 01 - 1991) புதன்கிழமை ஓசை: 325

## மருத்துவ மனைகள் மருந்து இன்மையால் மூடப்படும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் மருந்துப் பொருள்கள் மீதான தடையினால் யாழ். மாவட்டத்தில் உள்ள பல தனியார் மருத்துவமனைகள் வைத்திய சேவையை தொடர முடியாமல் மூடப்படும் நிலையில் உள்ளன.

யாழ்.மாவட்ட-தனியார் மருத்துவ மனைகளின் சங்கத்தின் சார்பில் டாக்டர் திரு. செகிகாதரன் இவ்விடயம் பற்றி கருத்து தெரிவிக் (4 ஆம் பக்கம் பார்க்க

## இழக்கில் சமூகசேவை நிறுவனங்கள்

# யுத்த நிறுத்தத்தின் பின்

# செயற்படத் தடைவிதிப்பு

### அம்பாறை - மட்டக்களப்பு தளபதி கருணா தகவல்

(மட்டக்களப்பு)

யுத்தநிறுத்தம் அம்பாறை-மட்டக்களப்பு மாவட்டங்களில் அதற்கு முந்திய நிலைமைகளில் பெருமளவில் மாற்றங்கள் ஏற்படாத அதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை சமூகசேவை நிறுவனங்களால் வழங்கப்பட்டுவந்த சிறு மருத்துவ உதவிகளுக்கும் இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தளபதி கருணா நேற்றுத் தெரிவித்தார்.

தளபதி கருணா ஈழநாதத்திற்கு நேற்றுவழங்கிய விசேட பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது: போர் நிறுத்தம் பற்றி அரச தரப்பில் திருப்தியான பதில் கிடைக்காததினால் மக்கள் பூரண நம்பிக்கையற்ற நிலையில் இருக்கின்றனர் எனவும் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிடுகையில் மக்கள் சொத்துக்களை இழந்து விட்டமையாலும், இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகமாக இருப்பதினாலும் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லமுடியாத நிலையுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துவெளியிட்ட அவர் முஸ்லிம் ஊர்காவற்படையினர் தற்பொழுது தமிழர்களைக் கொலை செய்யும் வாய்ப்பு குறைவாக உள்ளதினால் தமிழர்களின் சொத்துக்களைச் சூறையாடுவதில் ஈடுபட்டுள்ளதாகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)



## நாளைமுதல் 3ஆம் கட்ட நிவாரணம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

விசேட உலர் உணவு விநியோகத்தின் 3ஆம் கட்டம் நாளை வியாழக்கிழமைமுதல் சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இந்த மூன்றாம் கட்ட விநியோகத்திற்குத் தேவையான அரிசி போதியளவில் இருப்பில் இல்லாதபோதிலும் தற்போது கையிருப்பில் உள்ள பொருள்களை அடிப்படையாகக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணம்பெறசென்றோர் முகாமில் தடுத்து வைப்பு

(மட்டக்களப்பு)

நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதாகக்கூறி முகாமுக்கு அழைக்கப்பட்ட பல அப்பாவித் தமிழ் மக்கள் பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்றாம் திகதி மட்டக்களப்பு உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பட்டிப்பளை, அரசடித்தீவு மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்போவதாக அறிவித்து அவர்களை தமது முகாமுக்கு வரும்படி கோக்கட்டிச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சைக் கட்டணம் அறவிடத் தடை

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டில் புதிய வகுப்புகள் ஆரம்பிப்பதும், ஆண்டு 1 வகுப்பிற்கு அனுமதி வழங்குவதும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி தொடங்கப்படவுள்ளது.

வகுப்பேற்றப் பரீட்சைகள் அனைத்தும் பாடசாலை மட்டத்தில் இடம்பெறும். பாடசாலை மட்டப் பரீட்சைகளில் முன்பு சில பள்ளிக்கூடங்களில் 'சோதனைக் காசு' என்ற பெயரில் மாணவரிடமிருந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் யுத்த நிறுத்த மீறல்கள்

## ரெலோவாலும், ராணுவத்தாலும்

ரெலோ

## போராட விரும்பும் படையை நிறுத்தி வைக்க முடியாது

# செயற்படத் தடைவிதிப்பு

## அம்பாறை - மட்டக்களப்பு தளபதி கருணா தகவல்

(மட்டக்களப்பு)

யுத்தநிறுத்தம் அம்பாறை-மட்டக்களப்பு மாவட்டங்களில் அதற்கு முந்திய நிலைமைகளில் பெருமளவில் மாற்றங்கள் ஏற்படாத அதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை சமூக சேவை நிறுவனங்களால் வழங்கப்பட்டுவந்த சிறு மருத்துவ உதவிகளுக்கும் இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தளபதி கருணா நேற்றுத் தெரிவித்தார்.

தளபதி கருணா ஈழநாதத்திற்கு நேற்றுவழங்கிய விசேட பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது: போர் நிறுத்தம் பற்றி அரச தரப்பில் இருப்தியான பதில் இடைக்காததினால் மக்கள் பூரண நம்பிக்கையற்ற நிலையில் இருக்கின்றனர் எனவும் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிடுகையில் மக்கள் சொத்துக்களை இழந்துவிட்டமையாலும், இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகமாக இருப்பதினாலும் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லமுடியாத நிலையுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துவெளியிட்ட அவர் முன்பிருந்த பொலிஸ் காவல் படையினர் தற்போது தமிழர்களைக் கொலை செய்யும் வாய்ப்பு குறைவாக உள்ளதினால் தமிழர்களின் சொத்துக்களைச் சூறையாடுவதில் ஈடுபட்டுள்ளதாகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)



## தொடரும் யுத்த நிறுத்த மீறல்கள்

### ரெலோவாலும், ராணுவத்தாலும் குடும்பப்பெண் மானபங்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள படுவான்கரைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினராலும், ரெலோக் கும்பலினாலும் இளம் குடும்பப் பெண்ஒருவர் மோசமான முறையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சாம்பல்தீவில் ஒரு கொலை

(திருக்கோணமலை)

சிறிலங்கா அரசினால்போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட மறுநாளே திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ளசாம்பல் தீவில் சிறிலங்கா இராணுவத்தினரால் பொதுமகன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை திருக்கோணமலை மாவட்டத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவம் ஷெல் வீச்சு; பத்தமேனியில் சிறுமி காயம்

(நல்லூர்)

சிறிலங்காஇராணுவத்தினர் பலாலிஇராணுவமுகாமிலிருந்து மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஷெல் வீச்சும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதில் பத்தைமேனியைச் சேர்ந்த சிறுமி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மாலை ஏழு மணி

(4ஆம் பக்கம் பார்க்க)

### மாவிட்டபுரத்தில் நேற்றும் ஒரு போராளி காயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் யுத்த நிறுத்த அறிவித்தலின் பின்பும் சிறிலங்கா இராணுவத்தினரால் மேலும் ஒரு போராளி சுட்டுப்படுகாயப்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்றையதினம் மாவிட்டபுரத்தில் காவலரணிற்கு அருகே நின்ற விடுதலைப்புலிகள் இயக்கப் போராளி பார

(4ஆம் பக்கம் பார்க்க)

### ரெலோ மூர்க்கத் தனமாக தாக்கு

(மட்டக்களப்பு)

போர் நிறுத்த அறிவித்தலின் பின் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள குருக்கள்மடம் என்னுமிடத்தில் தமிழ்ப் பொதுமகனொருவரை ரெலோ இயக்கத்தினர் மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### குமணவில் வங்கிப் பணமும்!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறைமுகத்தை இன்று வந்துசேரும் என எதிர்பார்க்கப்படும்

(4ஆம் பக்கம் பார்க்க)

### அடையாள அட்டைகளும் வருகின்றன

(யாழ்ப்பாணம்)

கடந்த பல மாதங்களாக கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்தில் தேங்கிக் கிடந்த யாழ். மாவட்ட மக்கள் பலரின் தேசிய அடையாள அட்டைகள் இன்றுபருத்தித்துறைக்கு வர இருக்கும் குமண கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு இருக்கின்றன. (ஈ)

# போராட விரும்பும் படையை நிறுத்தி வைக்க முடியாது - ரஞ்சன்

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராட விரும்பும் சிறிலங்கா இராணுவத்தைத் தம்மால் நிறுத்திவைக்க முடியாது எனவும், இதனால் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தமது இராணுவம் தொடர்ந்து நடத்தக் கூடும் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா நேற்று முன்தினம் கொழும்பில் கருத்தரங்கொன்றில் பேசுகையில் தெரிவித்ததாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

அதேவேளை விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளில் புலிகளின் இராணுவத் தளபதிகளே கலந்து கொள்ளல் வேண்டுமென சிறிலங்கா இராணுவத்தளபதிகள் கருதுவதாகவும் ரஞ்சன்விஜேரட்னா தெரிவித்தார்.

### இராணுவத்தின் யுத்த மீறல் விசாரிக்கப்படும் -ரஞ்சன்

(கொழும்பு)

சிறிலங்கா அரசபடைகள் மேற்கொண்ட யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட இருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்துள்ளார்.

அரச படைகளுக்கெதிராக தெரிவிக்கப்பட்டிருக்கும் யுத்த நிறுத்த மீறல் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என தான் கருதுகின்ற போதிலும் இதுபற்றி விசாரணை மேற்கொள்ளப்பட இருப்பதாக அவர் தெரிவித்தார்.

### சிறிமா ஊன்றுகோல்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

காலம்சென்ற முன்னாள் சிறிலங்காப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 92ஆவது பிறந்தநாளான நேற்று கால்களை இழந்த இராணுவத்தினருக்கு ஒரு தொகுதி ஊன்றுகோல்களை எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோபண்டாரநாயக்கா அன்பளிப்பாக வழங்கினார்.

### முரட்டுபிடிவாதம், நிதானமற்றபோக்கு அரசாங்கம் இவற்றை கைவிடவேண்டும் -ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே

(கொழும்பு)

கடந்த ஆண்டின் மே மாதத்தில் நான் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சென்றிருந்தபோது அங்குள்ள குடிமக்களின் பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் விடுதலைப் புலிகளுக்கே இருந்ததை நேரில் கண்டேன். எனவே விடுதலைப் புலிகளுடன்பேசி உடன்பாடு காண்பதுவே எஞ்ஞான்றும் அமைதிக்கும் சகஜநிலைக்கும் வழிவகுக்கும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

இவ்வாறு சுதந்திரக் கட்சி எம். பி. ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் அறிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

யோகத்தின் 3ஆம் கட்டம் நாளை வியாழக்கிழமைமுதல் சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

அரிசி போதியளவில் இருப்பில் இல்லாதபோதிலும் தற்போது கையிருப்பில் உள்ள பொருள்களை அடிப்படையாகக்

(4ஆம் பக்கம் பார்க்க)

### நிவாரணம்பெறசென்றோர் முகாமில் தடுத்து வைப்பு

(மட்டக்களப்பு)

நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதாகக்கூறி முகாமுக்கு அழைக்கப்பட்ட பல அப்பாவித் தமிழ் மக்கள் பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்றாம் திகதி மட்டக்களப்பு உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பட்டிப்பளை, அரசடித்தீவு மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்போவதாக அறிவித்து அவர்களை தமது முகாமுக்கு வரும்படி கொக்கட்டிச்

(4ஆம் பக்கம் பார்க்க)

### பரீட்சைக் கட்டணம் அறவிடத் தடை

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டில் புதிய வகுப்புகள் ஆரம்பிப்பதும், ஆண்டு 1 வகுப்பிற்கு அனுமதி வழங்குவதும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதிதொடங்கப்படவுள்ளது.

வகுப்பேற்றப் பரீட்சைகள் அனைத்தும் பாடசாலை மட்டத்தில் இடம்பெறும். பாடசாலை மட்டப் பரீட்சைகளின் முன்பு சில பள்ளிக்கூடங்களில் 'சோதனைக் காசு' என்ற பெயரில் மாணவரிடமிருந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## 48 ஆம நாள நினைவஞ்சலி



வீரவேங்கை
2ஆவது லெப். கிரிஜா
(சுந்தரம் இரத்தினவதி)

தமிழ்த்தாய் மலர்ந்திட மலர்வு 22 - 11 - 1970
தமிழீழம் மலர்ந்திட உதிர்வு 23 - 11 - 1990

(மாங்குளம் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட பெண் வீரவேங்கை)

புனிதர்களின் புனிதவெள்ளியிலே
தமிழீழம் மலருமம்மா
தமிழீழ விடுதலை வேட்கையில்
தோன்றி மறைந்த ஆயிரம் ஆயிரம்
ஒளிவிளக்குகளில் நீயும் ஒன்றானாய்;
காவியமாகிவிட்ட எம்குல தாயகியே
நாளை மலரும் தமிழீழம் - அதில்
உன் கதையும் சேர்ந்து வரும்
வேளைவரும்; அப்போது நாமும்
உன்னிடம் சேர்ந்திடுவோம்
வீரவேங்கையே வாழிய
உன் தியாகம் வாழியவ்வ!

கேணியடி
(இமையாணன்)
கரணவாய்தெற்கு.
கரவெட்டி.

இவ்வண்ணம்
உன் பிரிவால் வாடும்
சி சுந்தரம் குடும்பத்தினர்.
(B/ 1832)

## நினைவு கூருகின்றோம்

## தை 9.

1985ஆம் ஆண்டு அச்சுவேலியில் இடம் பெற்ற இராணுவ முற்றுகையின் போது வீரமரணமடைந்த

**கப்டன் பண்டிதர்** (சி. ரவீந்திரன்-கம்பர்மலை வல்வை)
**நேரு** (செ. தில்லைச்சந்திரன்-அரியாலை)
**ரவி** (சோ. பிரதாபன்-கல்வியங்காடு)
**சாமி** (ஆ. தவரத்தினம்-புத்தூர்)
**சிவா** (சி சிவேந்திரன்-அச்சுவேலி தெற்கு)
**தவம்** (ந. தவராசா-அச்சுவேலி தெற்கு)

இதே சம்பவத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான பொதுமக்கள்

988ஆம் ஆண்டு காரைநகரில் இடம் பெற்ற இந்திய இராணுவத்தினரின் முற்றுகையின் போது வீரமரணமடைந்த

**லெப். கேணல் பாண்டியன்**
(செ. சிறீகரன்-கொக்குவில்)

1989 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த

**பேபி** (ஆ. குணசேகரம் - தொல்புரம் மத்தி)

1990ஆம் ஆண்டு அரியாலையில் தேசத்துரோகிகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

**மது** (எட்வின் கொறின்-கோண்டாவில்)

பளையில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**லெப்: பாக்கி** (ப. நந்தகுமார்-நாவற்குழி)
**லெப். விக்னா** (யாழ்ப்பாணம்)
**2 ஆம் லெப்: ஜெகன்** (க. அகிலன்-எழுதுமட்டுவாள்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
(B. 1829)

## 119 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியை அழைப்பு

தாயின் மடியில் 17 - 8 - 1975



தாயக மண்ணில் 13 - 9 - 1990

**வீரவேங்கை குருபரன்**
**செல்வன் யோகசேகரன் (கரன்)**

(எங்கள் குடும்பத்தின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து கடந்த 13-9-90 இல் நடைபெற்ற யாழ்ப்பாணக் கோட்டை அழிப்பில் வீரமரணமடைந்த எமது அன்புச் செல்வம்.)

அன்னாரின் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் 9-1-91இல் எமதில்லத்தில் நடைபெறும் இவருடன் உயிர் நீத்த 13 போராளிகளுக்குமாக நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் தவறாது பங்கு கொண்டு மதிய போசனம் அருந்தி மகிழ்விக்குமாறு நண்பர்கள், இயக்கத் தோழர்கள், உற்றார், உறவினர் யாவரையும் மிகவும் பணிவுடன் அழைக்கின்றோம்,

ஆடியபாதம் வீதி,
1ஆம் ஒழுங்கை
கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

பெற்றோர்
சோ. சங்கரலிங்கம் தம்பதிகள்
(சகோதரர்கள்)
உரிமையாளர்
கரன் றேடிங் சென்ரர்
தட்டாதெருச் சந்தி.
யாழ்ப்பாணம்.

(B-1838)

## முதலாண்டு நினைவஞ்சலி



## டிப்ளோமா மனைப்பொருளியல்

KALALAYAAN கலாலயா

**DIPLOMA IN HOME ECONOMICS**

- கேக் ஐசிங்
- சமையற் கலை [கீழைத்தேய, மேலைத்தேய உணவு வகைகள்

## குருநகர்வாடி மீண்டும் பழைய இடத்தில்

(குருநகர்)

கடந்த திங்களன்று காலை முதல் குருநகர் மீன் சந்தைப் படுத்தும் வாடி பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியது.

கடந்த ஜூன் மாதம் 16 ஆம் திகதி தொடங்கிய யுத்தம் காரணமாக மேற்படி வாடி நடைபெறாமல் இருந்து வந்ததும். குத்தகையாளரி சங்கத்தால் பல ஆயிரம்

## 2ஆவது லெப். கிரிஜா
(சுந்தரம் இரத்தினவதி)

தமிழ்த்தாய் மலர்ந்திட மலர்வு 22-11-1970 | தமிழீழம் மலர்ந்திட உதிர்வு 23-11-1990

(மாங்குளம் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட பெண் வீரவேங்கை)

புனிதர்களின் புனிதவெள்ளியிலே
தமிழீழம் மலருமம்மா
தமிழீழ விடுதலை வேட்கையில்
தோன்றி மறைந்த ஆயிரம் ஆயிரம்
ஒளிவிளக்குகளில் நீயும் ஒன்றானாய்;
காவியமாகிவிட்ட எம்குல நாயகியே
நாளை மலரும் தமிழீழம் - அதில்
உன் கதையும் சேர்ந்து வரும்
வேளைவரும்; அப்போது நாமும்
உன்னிடம் சேர்ந்திடுவோம்
வீரவேங்கையே வாழிய
உன் தியாகம் வாழியவே!

கேணியடி (இளையவாணன்) கரணவாய்தெற்கு, கரவெட்டி.

இவ்வண்ணம் உன் பிரிவால் வாடும் சி சுந்தரம் குடும்பத்தினர்.

(B/ 1832)

---

பனையில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**லெப்: பாக்கி** (ப. நந்தகுமார்-நாவற்குழி)

**லெப். விக்னா** (யாழ்ப்பாணம்)

**2 ஆம் லெப். ஜெகன்** (க. அகிலன்-எழுதுமட்டுவாள்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B. 1829)

---

அன்னாரின் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் 9-1-91 இல்லமதில்லத்தில் நடைபெறும் இவருடன் உயிர் நீத்த 13 போராளிகளுக்குமாக நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் தவறாது பங்கு கொண்டு மதிய போசனம் அருந்தி மகிழ்விக்குமாறு நண்பர்கள், இயக்கத் தோழர்கள், உற்றார், உறவினர் யாவரையும் மிகவும் பணிவுடன் அழைக்கின்றோம்,

அடியபாதம் வீதி, 1ஆம் ஒழுங்கை கொக்குவில் மேற்கு கொக்குவில்.

பெற்றோர்
சோ. சங்கரலிங்கம் தம்பதிகள்
(சகோதரர்கள்)
உரிமையாளர்
சரன் றேடிங் சென்ரர்
தட்டாதெருச் சந்தி.
யாழ்ப்பாணம்.

(B-1838)

---

# முதலாண்டு நினைவஞ்சலி



அமரர்
## திரு. முருகேசு சின்னத்தம்பி
முன்னாள் அதிபர்
யா/மீசாலைவீரசிங்கம் மகா வித்தியாலயம்

பிறப்பு: 14-01-1906 இறப்பு: 26-01-1990

ஆண்டுத் திதி: 15-01-1991 செவ்வாய்

புத்தூர் வீதி, மீசாலை.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(R-1014)

---

# டிப்ளோமா மனைப்பொருளியல்

## DIPLOMA IN HOME ECONOMICS

- கேக் ஐசிங்
- சமையற் கலை [கீழைத்தேய, மேலைத்தேய உணவு வகைகள் சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள் தயாரித்தல்]
- தையற் கலை [குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான உடைகள் தயாரித்தல் பூவேலை போடுதல்]
- கூந்தல் அலங்காரம் [கொண்டைகள் போடுதல், விக் தயாரித்தல் மணப்பெண் அலங்காரம்]
- கைவேலை [மக்ரமி, நூல்வேலை, கம்பளி நூல் வேலை, பஞ்சில் பொம்மைகள் செய்தல், வாழைநார்வேலைப்பாடுகள்]
- பூவேலை [கடதாசியினாலும், துணியினாலும் மலர்களை உருவாக்குதல்]
- வர்ணம் தீட்டுதல் [துணிகளிலும், கண்ணாடிகளிலும், இசைத் தட்டுகளிலும்]
- சித்திரக் கலை [சித்திரங்கள் வரைதல், கோலங்கள் போடுதல்]

★ பயிற்சிக் காலம் 6 மாதங்கள்
★ பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட DIPLOMA IN HOME ECONOMICS தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
★ வகுப்புகள் திங்கள், புதன் ஆகிய தினங்களில் காலை 9.00 மணிமுதல் பி.ப 1.00 மணிவரை நடைபெறும்.

**வகுப்புகள் ஆரம்பம்: 16- 01- 91**

★ தொழில் புரியும் பெண்கள் மற்றும் இல்லத்தரசிகளின் வசதி கருதி ஞாயிற்றுக்கிழமை வகுப்புகளும் 20-01-91 முதல் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு:-

# கலாலயா

பதிவு இல- 16020
கப்டன் நரேன் வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ்நகர்.

(B-1831)

---

## குருநகர்வாடி மீண்டும் பழைய இடத்தில்

(குருநகர்)

கடந்த திங்களன்று காலை முதல் குருநகர் மீன் சந்தைப் படுத்தும் வாடி பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியது.

கடந்த ஜூன் மாதம் 16 ஆம் திகதி தொடங்கிய யுத்தம் காரணமாக மேற்படி வாடி நடைபெறாமல் இருந்து வந்ததும், குத்தகையாளர் சங்கத்தால் பல ஆயிரம் ரூபா செலவில் திருத்தப்பட்ட வாடி இராணுவ நடவடிக்கைகளால் சேதம் அடைந்திருந்தும் குறிப்பிடத்தக்கது.

(21)

---

## வெளிநிலை விரிவுரைகள்

- கலைமாணி B.A. 1991 DEC.
- விஞ்ஞானமாணி B Sc., 1991 DEC. (புள்ளிவிபரவியல்)

கடந்த வருடம் ஏப்ரல் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்களின் கவனத்திற்கு:

பாடத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டியுள்ளதால் உடனடியாக விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இயக்குநர்
பட்டப்படிப்புகள் கல்லூரி.
148/1, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

(B-1818)

## சிந்தனைக்கு

அவநம்பிக்கை கொண்டவர் கையில்,
அரை உண்மைகள் முழுப் பொய்களின்
வேலையைச் செய்கின்றன.

— ஈனாக் ஃபிட்ச்பர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 09-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## சொற் கேளா கேடுகுடி...?

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்புத் தொடர்பாகவோ, அல்லது அரசாங்கம் விரும்பின் பேச்சுவார்த்தைக்கு தயார் என்ற அறிவிப்புத் தொடர்பாகவோ சிறிலங்கா அரச தரப்பில் இருந்து வரும் செய்திகளும் செயற்பாடுகளும் இவை தொடர்பாக நம்பிக்கை ஊட்டுபவையாகவில்லை.

புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பைத் தொடர்ந்து சிறிலங்கா அரசாங்கமும் ஒப்புதலுக்கு ஒருவாரகால யுத்த ஓய்வை அறிவித்தது. ஆனால், இராணுவத்தினர் யுத்தநிறுத்தஓய்வைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. விடுதலைப்புலிகளின் காப்பரண்கள் மீது தாக்குதல், பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு, தாக்குதல், மானபங்கம், வீடுகள் தகர்ப்பு போன்ற நடவடிக்கைகள் இராணுவத்தினரால் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

அதேவேளை அரசியல்வாதிகளிடம் இருந்து வரும் அறிவிப்புக்களும் யுத்த நிறுத்தத்தைப் பேணக்கூடியதாகவோ அன்றி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக்கூடியதாகவோ தெரியவில்லை.

சிறிலங்காவின் ஜனாதிபதி சகல அரசியல்கட்சிகளுடனும் கலந்தாலோசிக்கப்பட்டே யுத்த நிறுத்தம் பற்றியும், பேச்சுவார்த்தை பற்றியும் முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார் இந்த அறிவிப்பானது சிறிலங்கா ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்குத் தயாராகவில்லை என்பதையே வெளிக்காட்டுகின்றது. ஏனெனில் பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதலில் மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளதால்புலிகளுடன்பேச்சுவார்த்தைஆரம்பிக்கப் படுவதை ஆதரிக்கப் போவதில்லை. ஆயுதங்களை புலிகள் ஒப்படைத்தாலே அரசாங்கம் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்ற சாத்தியப்பட முடியாத ஒரு விடயத்தை அவர்கள் நிபந்தனையாக விதித்துள்ளார்கள். இதே போன்று எண்ணிக்கைக்காக பல்கிப் பெருகியுள்ளவையும் புலிகளின் எதிர்ப்பு ஒன்றையே கொள்கையாகக் கொண்டவையும் அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை,

இந்த நிலையில், சகல கட்சிகளின் முடிவின்படியே அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பானது யுத்த நிறுத்தத்தையும் பேச்சுவார்த்தையையும் குழப்புவதற்கு அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ள வழிவகை என்றுதான் எண்ண வேண்டியுள்ளது அத்தோடு கடந்த காலத்தில் தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதற்கும், தமிழரை ஒடுக்குவதற்கும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும், ஆக்கப்பட்ட சட்டங்களும் ஆட்சியில் இருந்த கட்சிகளால் ஏனைய கட்சிகளுடன் கலந்து பேசித்தானா ஆக்கப்பட்டன?

சிறிலங்கா ஜனாதிபதி பேச்சுவார்த்தை ஆரம்பத்திற்கே

# அகதிமுகாமிற்குச் சென்ற தமிழர்கள் இராணுவத்தால் கைது

(திருக்கோணமலை)
திருமலையில் காடுகளில் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்த தமிழர்கள் சிலர் சிறிலங்கா அரசின் யுத்தநிறுத்த அறிவிப்பை அடுத்து அகதி முகாம் ஒன்றிற்குச் சென்ற போது சிறிலங்கா இராணுவத்தால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் காடுகளில் இருந்து திரும்பிய பத்துத் தமிழர்கள் தமது உறவினர்களைப் பார்ப்பதற்காகத் தம் பலகாமம் கோவிலடியிலுள்ள அகதிகள் முகாமிற்குச் சென்றதை அடுத்து அம்முகாமிற்கு விரைந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் அவர்களை கைதுசெய்ததும் முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்; இவர்கள் முகாமில் வைத்துச் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார்கள்என தெரியவருகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் முள்ளிப்பொத்தானையைச்சேர்ந்த பி.குணசேகரம், வே.செல்வன், 98 ஆம் கொலனியைச் சேர்ந்த ரவி, முத்துலிங்கம், மகாலிங்கம், இந்திரன் ஆகியோர் அடங்குவர். கைது செய்யப்பட்டவர்கள் எவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. (அ)


## நான் நானாக இல்லை!

பார்வைக்கு பக்கம் மறைத்த
குதிரை நான்
என் முன்னால்.
வானில் முடியும் ஒரே ஒரு
பாதைதான் தெரிகிறது.
இரு காதிலும்
பட்டம் பதவி வைத்து
அறையப்பட்டு,
பட்டம் பறக்குமாம் - அதனால்
பட்டம் எடுத்த பின்
பறக்கவேண்டுமாம்

கணிதம் விஞ்ஞானம். இதில்
அதிவிசேட சித்தி
புத்தகங்களில் தொலைக்கப்பட்ட
ஆதிக்கம் அடக்குமுறை
போராட்டம்.
என் முன்னால் நடந்தும்
என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை

அமாவாசை இருட்டும்
அடுத்த நாள் முடியும்
கண்மூடிய இருட்டு
கணப் பொழுது வரைக்கும்

என்னைமூடிய இருட்டோ......
அட... நான் நினைத்தால் முடியும்!



லெப்: கேணல்
பாண்டியன்

1988 ஜனவரி 9 இல் காரைநகரில் இந்திய இராணுவத்தால் முற்றுகையிடப்பட்ட நிலையில் தன்னை அழித்துவீரமரணமெய்திய லெப். கேணல் பாண்டியன்அவர்களின் நினைவு தினம்இன்றாகும். இதனை ஒட்டி அவரின் குறிப்புப் புத்தகத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டஇக் கவிதைகள் பிரசுரமாகின்றன.

## கனவாய்ப் போகும் கனவுகள்!

எம் உறுதி
கிணற்றுக்கட்டு
ஆலமரமல்ல - அதை
அழிக்க நினைப்பது
நீ உனது முதுகை
பார்க்க முயற்சிப்பது!
தினக்கலண்டர்
கிழிப்பாய்
தினமும் மக்களை
அழிப்பாய் - ஆனால்
பூக்களைப் பறிப்பவர்க்கு
முட்கள் வரவேற்புரை
நிகழ்த்தாது!
விடுதலை கிடைத்தால்தான்
அறுவடை செய்வேன் என
முகத்தில் பயிர் வளர்த்து
காத்திருந்தோர் காலமல்ல - இது
கூலிப்படைகளின்
தலைகளை அறுவடை செய்யும்
விடுதலைப்புலிகளின் காலம்!

## உன்னைத்தான்!

சுயநலவாதிகள்
பிதவாதத்திற்குள்

## அறிவுச் சுற்றுலா

யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் சிறப்பு மாணவர்கள் யாழ். கடலோர மீன்பிடி நடவடிக்கைகள் பற்றி நேரடி அறிவு பெறுவதற்காக இன்று (9-01-1991) காக்கைதீவிலிருந்து கொழும்புத்துறை வரையுள்ள மீன்பிடி நிலையங்கள், குடியிருப்புக்களை பார்வையிட திரு. பா. இராஜேஸ்வரன் (சிரேஷ்ட விரிவுரையாளர்) தலைமையில் செல்லுகின்றனர்.

## மாணவர் தொடர்பான கூட்டம்

(யாழ்ப்பாணம்)
இலங்கை இறந்த பல்கலைக்

இராணுவத்தினரால் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

அதேவேளை அரசியல்வாதிகளிடம் இருந்து வரும் அறிவிப்புக்களும் யுத்த நிறுத்தத்தைப் பேணக்கூடியதாகவோ அன்றி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக்கூடியதாகவோ தெரியவில்லை.

சிறிலங்காவின் ஜனாதிபதி சகல அரசியல்கட்சிகளுடனும் கலந்தாலோசிக்கப்பட்டே யுத்த நிறுத்தம் பற்றியும், பேச்சுவார்த்தை பற்றியும் முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார் இந்த அறிவிப்பானது சிறிலங்கா ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்குத் தயாராகவில்லை என்பதையே வெளிக்காட்டுகின்றது. ஏனெனில் பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதலில் மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளதால்|புலிகளுடன்பேச்சுவார்த்தைஆரம்பிக்கப் படுவதை ஆதரிக்கப் போவதில்லை. ஆயுதங்களை புலிகள் ஒப்படைத்தாலே அரசாங்கம் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்ற சாத்தியப்பட முடியாத ஒரு விடயத்தை அவர்கள் நிபந்தனையாக விதித்துள்ளார்கள். இதே போன்று எண்ணிக்கைக்காக பல்கிப் பெருகியுள்ளவையும் புலிகளின் எதிர்ப்பு ஒன்றையே கொள்கையாகக் கொண்டவையும் அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை,

இந்த நிலையில், சகல கட்சிகளின் முடிவின்படியே அரசாங்கம் |நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பானது யுத்த நிறுத்தத்தையும் பேச்சுவார்த்தையையும் குழப்புவதற்கு அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ள வழிவகை என்றுதான் எண்ண வேண்டியுள்ளது அத்தோடு கடந்த காலத்தில் தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதற்கும், தமிழரை ஒடுக்குவதற்கும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும், ஆக்கப்பட்ட சட்டங்களும் ஆட்சியில் இருந்த கட்சிகளால் ஏனைய கட்சிகளுடன் கலந்து பேசித்தானா ஆக்கப்பட்டன?

சிறிலங்கா ஜனாதிபதி பேச்சுவார்த்தை ஆரம்பத்திற்கே குழப்பங்களை ஏற்படுத்த எத்தனிக்கும் அதேவேளை, பாதுகாப்புஇணைஅமைச்சர் ரஞ்சன் மேலும் ஒருபடி மேலே சென்று பேச்சுவார்த்தைக்கு வரம்புகளை விதிப்பதற்கு முற்பட்டுள்ளார். இதில் தமிழர் சுயநிர்ணய உரிமை என்ற பேச்சிற்கே இடமில்லை. தமிழருக்குத் தனியான ஆயுதப்படை அமைப்பொன்று உருவாக நாம் அனுமதிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் ஒரு தனித் தமிழ்த் தேசிய இனம். அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு இதில் கேள்வி நியாயத்திற்கு இடமேயில்லை. சிறிலங்கா அரசாங்கத்துடன் விடுதலைப்புலிகள் பேசித்தான் இதைத் தீர்க்க வேண்டும் என்ற அவசியமுமில்லை. தற்பொழுது பேச்சுவார்த்தைக்கு புலிகள் முன்வந்தது இப்பொழுது உள்ள நெருக்கடியை எவ்வாறு தீர்த்து வைக்கலாம் என்பதைப் பற்றியதே ஒழிய தமிழர் தேசிய இனமா, இல்லையா என்பதைப் பற்றி விவாதிக்க அல்ல உலகில் உள்ள பெரும்பான்மை அடக்குமுறை ஆட்சியாளர்கள் சிறுபான்மையினரில் தேசிய இனங்கள் உண்டென்று. எங்கேதான் ஒத்துக் கொண்டார்கள். அதை நிரூபிப்பது சிறுபான்மையினரது பொறுப்பு.

ஆனால், சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும், பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணாவிற்கும் ஒன்று தெளிவாகத் தெரியும் புலிகள் பலவீனத்தின் அடிப்படையில் யுத்த நிறுத்தத்தையோ, பேச்சு வார்த்தையையோ அறிவிக்கவில்லை என்று. ஆகையினால் யுத்த நிறுத்தத்தையோ, பேச்சுவார்த்தையையோ சிறிலங்கா அரசாங்கம் புறக்கணிக்கும் பட்சத்தில் மேலும் தமிழர் கோரிக்கைகள் சர்வதேச ரீதியில் பலமடைவது திண்ணம்;

அதேவேளை புலிகளை 1987 இல் யுத்த நிறுத்த மீறல்கள் மூலம் ஒரு யுத்தத்திற்கு தள்ளிய-நிர்ப்பந்தித்த- இந்திய இராணுவம் பெற்ற படிப்பினையை சிறிலங்கா மறந்துவிடாமல் இருப்பதும் நல்லது;

என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை

அமாவாசை இருட்டும்
அடுத்த நாள் முடியும்
கண்மூடிய இருட்டு
கனப் பொழுது வரைக்கும்

என்னைமூடிய இருட்டோ......
அட... நான் நினைத்தால் முடியும்!

## கனவாய்ப் போகும் கனவுகள்!

எம் உறுதி
கிணற்றுக்கட்டு
ஆலமரமல்ல - அதை
அழிக்க நினைப்பது
நீ உனது முதுகை
பார்க்க முயற்சிப்பது!
தினக்கலண்டர்
கிழிப்பாய்
தினமும் மக்களை
அழிப்பாய் - ஆனால்
பூக்களைப் பறிப்பவர்க்கு
முட்கள் வரவேற்புரை
நிகழ்த்தாது!
விடுதலை கிடைத்தால்தான்
அறுவடை செய்வேன் என
முகத்தில் பயிர் வளர்த்து
காத்திருந்தோர் காலமல்ல - இது
கூலிப்படைகளின்
தலைகளை அறுவடை செய்யும்
விடுதலைப்புலிகளின் காலம்!

## உன்னைத்தான்!

சுயநலவாதிகள்
மிதவாதத்திற்குள்
அராஜகவாதிகள் ஜனநாயக
போர்வைக்குள்
இரண்டுமில்லையெனில் நீ......

சாவின் நிழல்
வாசற்படிவரை இப்போது
சாவே கதவைத் தட்டும்
என்ன செய்வாய் அப்போது?

மழை பெய்தால்
குடை பிடிக்கிறாய்
குண்டு மழை பொழிகிறது
பிடிக்க மறுக்கிறாய்
துப்பாக்கியை!

உனது மனத்திற்கு
வழுக்கை விழவில்லை
சிந்தனையும்
தீக்குச்சி போல் ஆகவில்லை
எனில்
தீவிரவாதம் வாசற் கதவை
திறந்தே வைத்துள்ளது.

## 15,815 குடும்பங்கள் 42 அகதி முகாம்களில்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினதும், சிங்கள முஸ்லிம் ஊர்காவற்படை ஆகியவற்றின் மனிதாபிமான மற்ற தாக்குதல்களால் திருக்கோணமலை மாவட்டத்தில் தமதுசொந்தவாழ்விடங்களில் இருக்க முடியாது வீடுகளை விட்டு வெளியேறிய 15,815 குடும்பங்களுக்கு -இடம்பெயர்ந்த மக்களுக்கான 42 அகதி முகாம்கள் இயங்கிவருகின்றன இவ்வாறு இம்சைகளுக்குப் பயந்து வெளியேறியவர்களில் பெருந்தொகையானவர்கள் தமிழர்களாவர் எனவும் மொத்தமாக 75,927 அப்பாவிப் பொது மக்கள் இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் யாழ். மாவட்டத்தில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் திருக்கோணமலை மாவட்ட தொடர்பகம் சிலபுள்ளி விபரங்களைத் தெரிவித்துள்ளது.

பாண்டியன்!

1988 ஜனவரி 9 இல் காரைநகரில் இந்திய இராணுவத்தால் முற்றுகையிடப்பட்ட நிலையில் தன்னை அழித்துவீரமரணமெய்திய லெப். கேணல் பாண்டியன்அவர்களின் நினைவு தினம்இன்றாகும். இதனை ஒட்டி அவரின் குறிப்புப் புத்தகத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட இக் கவிதைகள் பிரசுரமாகின்றன.

## அறிவுச் சுற்றுலா

யாழ்ப்பாண பல்கலைக் கழக புவியியல் சிறப்பு மாணவர்கள் யாழ். கடலோர மீன்பிடி நடவடிக்கைகள் பற்றி நேரடி அறிவு பெறுவதற்காக இன்று (9-01-1991) காக்கைதீவிலிருந்து கொழும்புத்துறை வரையுள்ள மீன்பிடி நிலையங்கள், குடியிருப்புகளை பார்வையிட திரு. பா. இராஜேஸ்வரன் (சிரேஷ்ட விரிவுரையாளர்) தலைமையில் செல்லுகின்றனர்.

## மாணவர் தொடர்பான கூட்டம்.

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் புதிய கல்வியாண்டுக்கான கற்கை நெறிகளுக்கான பதிவினை மேற்கொள்ள வேண்டியிருக்கும் மாணவர்களின் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராயும் முகமாக, அம் மாணவர்களுக்கான கூட்டமொன்றுக்கு யாழ். பிராந்திய நிலைய மாணவர் நலன் புரிச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. மேற்படி கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஈ0)

## ஹெலியிலிருந்து சுருங்கிய பத்திரிகை!

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் கடந்த இரு தினங்களில் பல முறையில் வட்டமிட்ட ஹெலிகொப்டர் ஒன்றுதுண்டுப்பிரசுரங்கள் அமைப்பில் படப் பிரதி செய்யப்பட்ட காகிதங்களை வீசியது. ஒரு பகுதியில் 2 ஆம் திகதி தினகரன் முற்பக்கமும், மறுபுறத்தில் டெய்லி நியூஸ் நாளிதழ் முற்பக்கமும் படப்பிரதிசெய்யப்பட்டிருந்தன. இது வரை காலமும் இவ்வாறு வானத்திலிருந்து வடபகுதி மக்களுக்கு எரிக்கரைப் பத்திரிகைகள் முழுமையாகவே விநியோகிக்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# போரில் ஈராக்கிற்கு ஆதரவளிக்க யாசீர் அரபாத் முடிவு

(பாக்தாத்)

வளைகுடாவில் போர்ஒன்று ஏற்படுமானால் ஈராக்கிற்கே ஆதரவளிக்கப் போவதாக பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் அறிவித்துள்ளார்.

பாக்தாத்தில் இதனை நேற்று முன்தினம் அறிவித்த யாசிர் அரபாத் ஈராக்கின் 70 ஆவது இராணுவ தினத்தை யொட்டி ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் விடுத்துள்ள அறிக்கையை வரவேற்றுள்ளார்.

இதேவேளை அமெரிக்காவும், பிரித்தானியாவும் குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறுவதற்கான ஐ.நா. மன்றம் விதித்த காலக்கெடுவில் மாற்றம் எதுவும் இல்லை எனத் தெரிவித்துள்ளன.

இன்று ஜெனிவாவில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேகரும், ஈராக்கிய வெளியுறவுத் துறை அமைச்சர் தாரிக் அஷீசும் சந்தித்துப் பேசவுள்ளனர். இதுவே ஈராக்கிற்கு வழங்கப்படும் கடைசிச் சந்தர்ப்பம் எனவும் ஜேம்ஸ் பேகர் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் தாரிக்அஷீசை சந்திப்பதற்கு முன்பாக கடைசித் தடவையாக நேட்டோ அணித் தலைவர்களையும், ஐரோப்பிய சமூக அமைச்சுத் தலைவர்களையும், மற்றும் நேச நாடுகளின் உறுப்பினர்களையும் சந்திக்க உள்ளார்.

இதேநேரம் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் வளைகுடாவில் போர் மூண்டால் உலகளாவிய ரீதியில் தாக்குதல் இடம் பெறும் என எச்சரித்துள்ளார்.

ஐ.நா.சபையும், இஸ்ரேல், ஜோர்டான், சிரியா, மற்றும் லெபனானில் உள்ள தனது அமைதி காக்கும் படையினை திருப்பி அழைக்க முடிவு செய்துள்ளது.

## வளைகுடாவில் யுத்த நெருக்கடியைச் சமாளிக்க ஏழு அமைச்சர்கள் நியமனம்

வளைகுடாவில் யுத்தம் ஏற்படின் அதனைச் சமாளிக்கக் கூடிய வகையில் திட்டங்களை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்ட ஏழு அமைச்சர்களுக்கு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பான அறிக்கை ஒன்றை தயாரித்து இன்று புதன்கிழமை தன்னிடம் ஒப்படைக்குமாறு அந்த அமைச்சர்களைப் பிரேமதாசா கேட்டுள்ளார்.


வர்த்தகம், மின்சாரவலு, உணவு, தோட்டக் கைத்தொழில், போக்குவரத்து, தொழிற் முன்னிலைப் பயிற்சி மற்றும் வெளிவிவகார அமைச்சர்களையே ஆர். பிரேமதாசா இவ்வாறு கேட்டுள்ளார்.

## மரத்திலிருந்து வீழ்ந்தவர் மரணம்

(சாவகச்சேரி)

தென்னை மரத்திலிருந்து தவறிவிழுந்து படுகாயமடைந்தவர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை கச்சாய் றோட சாவகச்சேரியைச் சேர்ந்த வி. விஜயராசா (வயது 35) என்பவர் தென்னைமரத்தில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்து யாழ் போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். எனினும் அங்கு அவர் மரணமடைந்துள்ளார். (க 85)



# சந்திரசேகர் அநாகரிகமான ஒரு அரசியல்வாதியல்ல -கருணாநிதி

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த தமிழக அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் போதுமானவையல்ல என்பதற்காக அம் மாநில அரசாங்கம் கலைக்கப்பட மாட்டாது என இந்தியப்பிரதமர் சந்திரசேகர் நேற்று ராஜ்ய சபாவில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். விடுதலைப்புலிகள் தொடர்பாக ராஜ்ய சபாவில் திருமதி ஜெயந்தி நடராஜனும், திரு ஜே. மாத்துாகம் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு பிரதமர் குறிப்பிட்டார்.

இதனிடையில் கடந்தவியாழன்று புதுடில்லியில் பிரதமர் சந்திரசேகரை தமிழக முதல்வர் கருணாநிதி சந்தித்துள்ளார். அதன்பின் நிருபர்களிடம் பேசிய அவர் 'தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்து இந்தியப் பிரதமரிடம் விளக்கிய போது அவர் திருப்தி வெளியிட்டதாகக்' குறிப்பிட்டுள்ளார். மேலும் பேசுகையில் சந்திரசேகர் அநாகரிகமான அரசியல்வாதி அல்ல என்றும் கருணாநிதி கூறியுள்ளார்.

## லெப். கேணல் பாண்டியன் நினைவஞ்சலிக் கூட்டங்கள்

(கொக்குவில்)

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதியாகவிருந்து வீரமரணமடைந்த வீர வேங்கை லெப். கேணல் பாண்டியன் செ. ஸ்ரீகரன் அவர்களின் 3 ஆம் ஆண்டுநினைவஞ்சலிக் கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு கொக்குவில் இருபாலர் சிவசுப்பிரமணிய கோவில் வீதியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள்மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் உரை நிகழ்த்துவார்கள். கூட்ட முடிவில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியிலும் நினைவு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன விஷேட நிகழ்ச்சிகளும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன. (20)

## நடப்புக் கல்வியாண்டில் வகுப்புப் பருமன் 35

(நல்லூர்)

நடப்பு கல்வியாண்டில் வகுப்புப் பிரிவொன்றின் பருமன் 35 (40 அல்ல.) பாடசாலை அனுமதியின்போது வகுப்புப் பிரிவொன்றில் மொத்தம் 35 மாணவர்களுக்கு மேல் அனுமதிக்கக் கூடாது என்று யாழ் கல்வித் திணைக்களம் பணிப்புரை வழங்கியுள்ளது.

இராணுவம்

வளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து தொடர்ச்சியாக ஷெல் வீச்சும் அப்பாவிப் பிரயோகமும் பரவலாக மேற்கொள்ளப்பட்டது. பத்தைமேனிப் பகுதியில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் அப்பகுதியைச் சேர்ந்த உஷா (14) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)

சாம்பல்தீவில்

உள்ளசாம்பல்தீவில் இராணுவ முகாமில் இருந்து ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்

யுத்தநிறுத்தத்தின்

தெரிவித்த அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை செங்கலடி வந்தாறுமூலைப் பகுதியில் முஸ்லிம ஊர்காவற்படையினரும், இராணுவத்தினரும் சேர்ந்து ஈடுபட்ட சூறையாடல் சம்பவத்தை சுட்டிக்காட்டினார்.

மேலும் யுத்தநிறுத்தத்தின் முன்பு அகதிகள் உள்ள இடங்களுக்கு சில சமூகசேவை நிறுவனங்கள் சென்று மருந்துப் பொருள்களை விநியோகித்து வந்தன. தற்பொழுது செங்கலடிக்கு உட்புறமாகவுள்ள கிராமங்களுக்குச் சென்று மருந்துப் பொருள்கள் விநியோ

குமணவில்

''குமண'' என்ற கப்பலில் அத்தியாவசிய பொருள்களுடன் வங்கிகளுக்குரிய பணம் என்பவை எடுத்து வரப்படும்

இக்கப்பலில் 1435 மெற்றிக் தொன் அரிசி, 786 மெற்றிக் தொன் மா. 400 மெற்றிக் தொன் சீனி, 200 மெற்றிக் தொன் பருப்பு, சரக்குப் பொருள்கள் என்பவைகளுடன் மக்கள்வங்கி, இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, கொமர்சல் வங்கி போன்றவற்றிற்கும் யாழ். மாநகர சபைக்குரிய பணமும் ஓய்வூதியவுச்சர்களும் வந்து சேரவுள்ளன இதேவேளை லிகிரியா என்ற மற்றுமொரு கப்பல் ஒரு தொகுதி மாவுடன் பருத்தித்துறைக்கு வர இருக்கின்றது. (க)

மருந்துவ

கையில் தனியார் மருத்துவமனைகளுக்கு தேவையான மருந்துப் பொருள்களை அனுப்பி வைக்கும்படி அரச அதிபர் ஊடாக அரசினை பல

முரட்டுப்பிடிவாதம்

யில் இதுவரை நடைபெற்றுள்ளவன்செயல்கள், மோதல்களால் ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் அடைந்த இம்சை போதும் போதுமென்றுவிட்டது. இந்நாட்டில் இனியும அழிவிற்கு இடம் வைக்காமல் அரசாங்கம் முரட்டுப் பிடிவாதத்தையும், நிதானமற்ற போக்கையும் கைவிடவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

ரெலோ

தாக்குதலுக்குள்ளானவரின் நிலை அபாயகரமானதாக உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (மு)

## கணவனைக் கொன்ற மனைவி

(மாத்தறை)

மது போதையில் வந்து உறங்கிக்கொண்டிருந்த கணவனின் கழுத்தை கத்தியினால் வெட்டித் துண்டாடியதாக அவரது மனைவியை பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஹெரணைப் பகுதியில் இடம் பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நான்கு பிள்ளைகளின் தந்தையான சோமபால (38 வயது) என்பவரை அவரது மனைவி சோமாவதி கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக காலம் சென்றவரின் மகளான

வித்துள்ளார்.

தொழில், போக்குவரத்து,

# லெப். கேணல் பாண்டியன் நினைவஞ்சலிக் கூட்டங்கள்

(கொக்குவில்)

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதியாகவிருந்து வீரமரணமடைந்த வீரவேங்கை லெப். கேணல் பாண்டியன் செ. ஸ்ரீகரன் அவர்களின் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோவில் வீதியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள்மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் உரை நிகழ்த்துவார்கள். கூட்ட முடிவில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியிலும் நினைவு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன விஷேட நிகழ்ச்சிகளும் ஏற்பாடுசெய்யப் பட்டுள்ளன (20)

---

இராணுவம்

பனவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து தொடர்ச்சியாக ஷெல் வீச்சும் துப்பாக்கிப் பிரயோகமும் பரவலாக மேற்கொள்ளப்பட்டது. பத்தைமேனிப் பகுதியில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் அப் பகுதியைச் சேர்ந்த உஷா (14) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (85)

---

சாம்பல்தீவில்

உள்ள சாம்பல்தீவில் இராணுவ முகாமில் இருந்து ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் சாம்பல்தீவுப் பகுதியில் உள்ள ஆத்தி மோட்டை பாடசாலைக்கு அருகில் வைத்து வல்லிபுரம் என்ற பொதுமகனைச் சுட்டுக் கொன்றுள்ளனர். சிறிலங்கா அரசினால் போர் நிறுத்த உத்தரவு அறிவிக்கப்பட்ட மறுநாளே இச் சம்பவ நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

---

யுத்தநிறுத்தத்தின்

தெரிவித்த அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை செங்கலடி வந்தாறு மூலைப் பகுதியில் முஸ்லிம் ஊர் காவற்படையினரும், இராணுவத்தினரும் சேர்ந்து ஈடுபட்ட சூறையாடல் சம்பவத்தை சுட்டிக்காட்டினார்.

மேலும் யுத்தநிறுத்தத்தின் முன்பு அகதிகள் உள்ள இடங்களுக்கு சில சமூகசேவை நிறுவனங்கள் சென்று மருந்துப் பொருள்களை விநியோகித்து வந்தன. தற்பொழுது செங்கலடிக்கு உட்புறமாகவுள்ள கிராமங்களுக்குச் சென்று மருந்துப் பொருள்கள் விநியோகிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார் கொக்கட்டிச்சோலைப் பகுதியிலும் நிலைமை இவ்வாறாகவேயுள்ளது எனக் குறிப்பிட்ட தளபதி கருணா வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு அரச நிவாரணத்தைக்கூட அரசாங்கம் நிறுத்தியுள்ளது எனவும் தெரிவித்தார்.

---

## மரண அறிவித்தல்

### யோகறஞ்சன் பெர்ணாண்டோ

மிருசுவிலைச் சேர்ந்த யோகறஞ்சன் பெர்ணாண்டோ 29-12-90 அன்று சவுதிஅரேபியாவில் அகால மரணமானார். இவர் திரு திருமதி H A பெர்ணாண்டோ (இளைப்பாறிய ஆசிரியர்) தம்பதிகளின் அன்பு மகனும் மனோறஞ்சினி (அரசினர் வைத்தியசாலை சாவகச்சேரி), அன்ரன் மனோறஞ்சன் (பிரான்ஸ்), ஜெனோறஞ்சினி (சைவப்பிரகாச வித்தியாசாலை வவுனியா), கலாறஞ்சினி, ஜீவறஞ்சன் (அவுஸ்திரேலியா) செல்வறஞ்சன், நிறஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசிந்தா (பிரான்ஸ்), சற்குணநாகன் (இ.போ.ச. வவுனியாச்சாலை), ஜொய்சன (இரத்தினபுரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், யூலியன், யூட், யூடிற்அனோஜா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், தர்ஷன், டினேஷன், கிறிஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
H A பெர்ணாண்டோ
மிருசுவில்.

(R/1018)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

---

(வயது 35) என்பவர் தென்னைமரத்தில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்து யாழ் போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். எனினும் அங்கு அவர் மரணமடைந்துள்ளார். (க 85)

---

குமணவில்

"குமண" என்ற கப்பலில் அத்தியாவசிய பொருள்களுடன் வங்கிகளுக்குரிய பணம் என்பவை எடுத்து வரப்படும்

இக்கப்பலில் 1435 மெற்றிக் தொன் அரிசி, 786 மெற்றிக் தொன் மா, 400 மெற்றிக் தொன் சீனி, 200 மெற்றிக் தொன் பருப்பு, சரக்குப் பொருள்கள் என்பவைகளுடன் மக்கள்வங்கி, இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, கற்றன்நஷனல் வங்கி போன்றவற்றிற்கும் யாழ். மாநகர சபைக்குரிய பணமும் ஓய்வூதியவுச்சர்களும் வந்து சேரவுள்ளன இதேவேளை ஜகிரியா என்ற மற்றுமொரு கப்பல் ஒரு தொகுதி மாவுடன் பருத்தித்துறைக்கு வர இருக்கின்றது. (க)

---

மருத்துவ

கையில் தனியார் மருத்துவமனைகளுக்கு தேவையான மருந்துப் பொருள்களை அனுப்பி வைக்கும்படி அரச அதிபர் ஊடாக அரசினை பல தடவைகள் கோரிய போதிலும் பயன் எதுவும் கிடைக்காமையால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் சுமார் 2.8 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களுக்காக முற்பணமாக ஒரு மில்லியன் செலுத்தி அவற்றை இங்கு எடுத்து வருவதற்கு மேற் கொண்ட முயற்சியும் கூட்டுப் படைகளின் தடை உத்தரவால் தோல்வியில் முடிந்துள்ளது என்றார்.

இந்த நிலை தொடர்ந்தும் நிலவும் பட்சத்தில் குடாநாட்டிலுள்ள பல சிறிய தனியார் மருத்துவ மனைகளை மூடிவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இவற்றின் உரிமையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது

ஓரளவு மருந்துப் பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் குறிப்பிட்ட சில தனியார் மருத்துவ மனைகளே தற்போது வைத்திய சேவையை தொடரக் கூடிய நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவ புள்ளி விபரங்களின் படி மார்கழி, தை, மாசி ஆகிய தற்போதைய காலப் பகுதியிலேயே பல்வேறு வகையான நோய்கள் கடுமையாக மக்களைத் தாக்குவதாகவும் இதனால் இக்காலப் பகுதியில் போதிய மருத்துவ வசதிகள் இன்றி மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

---

லைப்புலிகள் தொடர்பாக ராஜ்ய சபாவில் திருமதி ஜெயந்தி நடராஜனும், திரு ஜே. மாத்தூரகம் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு பிரதமர் குறிப்பிட்டார்.

அவர் திரு நி ... தாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் பேசுகையில் சந்திரசேகர் அநாகரிகமான அரசியல்வாதி அல்ல என்றும் கருணாநிதி கூறியுள்ளார்.

# நடப்புக் கல்வியாண்டில் வகுப்புப் பருமன் 35

(நல்லூர்)

நடப்பு கல்வியாண்டில் வகுப்புப் பிரிவொன்றின் பருமன் 35 (40 அல்ல.) பாடசாலை அனுமதியின்போது வகுப்புப் பிரிவொன்றில் மொத்தம் 35 மாணவர்களுக்கு மேல் அனுமதிக்கக் கூடாது என்று யாழ் கல்வித் திணைக்களம் பணிப்புரை வழங்கியுள்ளது.

---

முரட்டுப்பிடிவாதம்

கையில் இதுவரை நடைபெற்றுள்ள வன்செயல்கள், மோதல்களால் ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் அடைந்த இம்சை போதும் போதுமென்றுவிட்டது. இந்நாட்டில் இனியும் அழிவிற்கு இடம் வைக்காமல் அரசாங்கம் முரட்டுப் பிடிவாதத்தையும், நிதானமற்ற போக்கையும் கைவிடவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

---

ரெலோ

தாக்குதலுக்குள்ளானவரின் நிலை அபாயரமானதாக உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (மு)

---

நாளை முதல்

கொண்டு சிறு மாற்றத்தைக் கொண்ட புதிய விநியோக அளவுத்திட்டத்தில் இந்த விநியோகம் மேற்கொள்ளப்பட இருக்கின்றது இதன்படி சீனி, மா, சில்லறைப் பொருள்கள் போன்றவற்றிற்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது (க)

---

ரெலோவாலும்

களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் உள்ள தன்னிச்சைப் பகுதிக்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ இயக்கத்தினரும் வீடொன்றினுள் புகுந்து குடும்பப்பெண் ஒருவரை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளனர். தடுக்க முயன்ற இந்தப் பெண்ணின் கணவனையும் இவர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கிவிட்டு அந்த வீட்டில் நின்ற இரண்டு ஆடுகளையும், கோழிகளையும் பிடித்துக்கொண்டு செல்லும் போது அப்பெண்ணின் கணவரை எச்சரித்துவிட்டுச் சென்றனர். (மு)

---

மாவிட்டபுரத்தில்

திதாஸன் என்பவரே இவ்வாறு சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுப்படுகாயப்படுத்தப்பட்டவராவார். படுகாயமடைந்தநிலையிலும் விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்த அறிவித்தலைக்கடைப்பிடித்து எதிர்த்தாக்குதல் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (மு)

---

கணவனைக் கொன்ற மனைவி

(மாத்தறை)

மது போதையில் வந்து உறங்கிக்கொண்டிருந்த கணவனின் கழுத்தை கத்தியினால் வெட்டித் துண்டாடியதாக அவரது மனைவியை பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஹொரணைப் பகுதியில் இடம் பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நான்கு பிள்ளைகளின் தந்தையான சோமபால (38 வயது) என்பவரை அவரது மனைவி சோமாவதி கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக காலம் சென்றவரின் மகளான செல்வி சித்தா ஜயந்தி (வயது 17) பொலிசாரிடம் கூறியதையடுத்து திருமதி சோமாவதி விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

---

பரீட்சைக்

பணம் வசூலிக்கப்பட்டது. ஆனால் இம்முறை பாடசாலை மட்டப் பரீட்சையின் பொருட்டு மாணவர் விடமிருந்து பிரத்தியேகமாகப்பணம் வசூலிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. பாடசாலை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப் பட்ட காகிதாதிகள், பரீட்சைகளுக்கான ஒதுக்கீட்டைப் பயன்படுத்தும்படி யாழ் கல்வித்திணைக்கள கல்வி நிர்வாகப் பொறுப்பதிகாரி ஆர். சிவானந்தன் அனுப்பியுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

நிவாரணம்

சோலையில் முகாமிட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அழைத்தனர்.

இவர்களின் அழைப்பை நம்பி முகாமுக்கு சென்றவர்களில் பல ஆண்கள் இந்த முகாமில் பணயக் கைதிகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை பெண்களுக்கு எந்தவித நிவாரணப் பொருள்களும் வழங்கப்படாமல் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டவர்கள் எவரும் இதுவரை விடுதலைசெய்யப்படவில்லை (ச)